தி.மு.கழகத்தின் இதயத் துடிப்பு தான் 'முரசொலி'!

அரசியல் மாமேதை முரசொலி மாறன் அவர்கள் 1980 - ஆம் ஆண்டு 'முரசொலி' ஏடு தனது வெள்ளி விழா ஆண்டில் மதுரைப் பதிப்பினை தொடங்கியபோது 'மதுரையில் ஒலிக்குது முரசொலி' என்று தலைப்பிட்டு , அதற்கு வாழ்த்துத் தெரிவித்து தன் கைப்பட எழுதிய கடிதம் .

அதனை இங்கே வெளியிட்டுள்ளோம். அது வருமாறு:-

முரசொலி மாறன் கடிதம்!

மதுரையில் ஒலிக்குது முரசொலி!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாரும் தேவையும்" - என்று பேராசிரியர் அண்ணாவால் பேரறிஞர் பெருந்தகையால் துவக்கப்பட்ட 'முரசொலி' ஏடு தனது வெள்ளிவிழா ஆண்டில் மதுரைப் பதிப்பினைத் துவங்கி நடத்துவது மிகுந்த மகிழ்ச்சியும், இது அச்சுவடிவம் மட்டுமாகத் தொடங்கி மேலும் ஏட புதிய கிளைகளாகும்.

1942- ஆம் ஆண்டு கழகப் பிரச்சாரமாக 'முரசொலி' துவங்கப்பட்டது.

பின்னர் 1946- ஆம் ஆண்டு 'முரசொலி' வார ஏடாக உருப்பெற்றது.

அதன்பிறகு தடைகளைத் தாண்டி வளர்ச்சியுடன் 1954- ஆம் ஆண்டே வெள்ளிவிழாவை நோக்கி வார ஏடாக வெளிவரத் துவங்கியது.

1960- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (செப்டம்பர்-15) முதல் 'முரசொலி'யை தினசரி ஏடானது.

ஆம், 'முரசொலி' வெள்ளிவிழாவை 1954- ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட நாளிலிருந்து கணக்கிட்டால் இந்த ஆண்டு 25- ஆவது ஆண்டை முடித்துக்கொண்டு 26- ஆவது வெள்ளிவிழா ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. பயணத்தின் பாதையை போட்டுவைக்கிறது.

திரும்பிப் பார்க்கிறேன்- திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'முரசொலி'யாக இதயத் துடிப்புதான் எனக்குக்கொடுக்கிறது! உண்மைக் கட்சி கழகத்தின் தலைவரின் இயக்கத்தை பலமாக்குவதுதான் அதன் இயக்கமும்!

திராவிட முன்னேற்றக் கழக பேரியக்க பிரகடனம் வெளிவந்தபோது அதன் இயக்கமே இயக்கம் வெளிவரும் நாடு நாடும் மகுடம் சூட்டுவதுதான் 'முரசொலி'யின் லட்சியமாக வெளிவந்தது அதன் எதிரிகளும் எழுதி வைப்பர்.

'முரசொலி' பத்திரிகையைத் தடுத்திட்டிருக்கிறது.

அதன் கேட்டு திரிந்தாலும்! உலக ஏடுகளின் பிரகடனமாகவே.

முதுமையான வெளிவந்து இடையிட்ட காலமும் உண்டு. இயலாமலும் அதிலே வளர்வதும் அல்லது வளர்ச்சியும் புரிந்துகொள்ள முடியாமல் அதிகரிப்பதும் உண்டு!

- இவ்வாறு; தி.மு.கழகத்தின் பாடக்கருவியாக 'முரசொலி' 25- வயதைத் தாண்டி வெள்ளிவிழா காணுகிற அடியெடுத்து கோடிக்கணக்கான மக்கள் மத்தியிலும் வெற்றியையும் பெற்றுள்ளது.

இதைப்போலவே 'முரசொலி' மதுரையிலும் இன்று ஒலி வெளிவருகிறது - என்பது பாடுபடும் கழகத் தோழர்களுக்கு மேலும் மகிழ்ச்சியை தரும் என்று கருதுகிறேன்.

கொள்கைச் சிந்தனையின் - பொதுவாக, மேலும் வலிமை மிகுந்த - துடிப்பாகிய - மதுரை பதிப்பு உருவாகியிருக்கிறது.

அதைக் கொண்டாடுகிற இதயம் நன்றி மறந்தவர் வரலாறு - என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியுள்ளது.

'முரசொலி' மதுரை பதிப்பு வெளிவர சிலர் அதிகக் கோரிக்கையை இன்று ஒரு விண்ணப்பம் படுகிறது. அப்படியே இன்றும் இருக்கும் - என்பதை நினைவூட்டுகிறேன்.

நான் அருமையாக... அதுவும் ஏட கட்டுப்பாடாக ஏட நான் அருமையாக

தொடர்வது என்பது அதிகாரம் நிற்கிறேன்.

- இந்த உரிய அதிக நிகழ்வதாகும் கருவும் என்ன முறை இதற்காகும் 'முரசொலி'யைத் தினமும் தவறாமல் வாங்கிப் படிக்கிற அதிகக் கொண்டிருக்கிறேன்!

ஒரேயே அரசுக்கொண்டும் நினைக்க இதய நன்றியை உரித்தாக்கிறேன்.

என்னை இன்னைக்கிடம் பல்கலைக்கழகம் தமிழர் குடும்பங்களுக்கும், ஆட்சியாளர் கோரிக்கைகளுக்கும் குடிமக்களுக்கும், பிரபலமாக, விரும்பியவர்களுக்கும் என்னை இதய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முரசொலி மாறன் அவர்கள் தன் கைப்பட எழுதியுள்ளார்.

- இந்தக் கடிதத்தைப் பாதுகாத்து அனுப்பிய பத்திரிகையாளர் தி.கூடலரசன் அவர்களுக்கு நன்றி. (ஆ.ர்)

நீட் தேர்வுக்கு எதிராக

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் உண்ணாவிரதம்!

மஞ்சகுப்பம் தலைமை அஞ்சல் நிலைய அலுவலகம் முன்பு நடைபெறுகின்றது!

கடலூர், ஆக. 19-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராக உண்ணாவிரத அறப் போர் மஞ்சகுப்பத்தில் நடைபெறுகிறது.

இது பற்றிய விவரம் வருமாறு:

நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், நாளை (20.08.2023- ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணி முதல் மாலை வரை கடலூர் மஞ்சகுப்பம் தலைமை அஞ்சல் எதிரில் மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடைபெறும்.

அது சமயம் இந்த உண்ணாவிரத்தில் இளைஞர்கள், மாணவர்கள், மருத்துவர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகதோழர்கள், இளைஞர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கடலூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி நிர்வாகிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான

ரூ.5,077 கோடி மதிப்பீட்டிலான 5557.75 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன!

சென்னை, ஆக. 19-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப் பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி நேற்று முன்தினம் (17.08.2023) நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம், சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.10 கோடி மதிப்பீட்டிலான நிலம் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமாக நாகப்பட்டினம் வேளாங்கண்ணி கிழக்கு கடற்கரை சாலையில் பாப்பாகோயில் கிராமத்தில் அமைந்துள்ள 1.39 ஏக்கர் நிலத்தில் இரண்டு நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருந்து வந்தனர். இந்நிலையில் நாகப்பட்டினம் மண்டல இணை ஆணையர் வி.குமரேசன் அவர்கள் தலைமையில் உதவி ஆணையர் திருமதி ப.ராணி முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.10 கோடியாகும். இந்நிகழ்வின்போது தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) திருமதி பி.எம். அமுதா, திருக்கோயில் செயல் அலுவலர் இரா. தினேஷ் சுந்தரராஜன் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

புதிய அரசு பொறுப்பேற்ற 07.05.2021 முதல் இன்று வரை திருக்கோயில்களுக்குச் சொந்தமான ரூ.5,077 கோடி மதிப்பீட்டிலான 5557.75 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.